மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இலக்கியத்தின் பெயரால் இங்கே படித்தார் இல்லையா? நாங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டுதானே இருந்தோம். ஒரு முதலமைச்சரைப்பற்றி படித்ததை எல்லாம் கேட்டுக் கொண்டு தானே இருந்தோம். இப்போது நீங்கள் குறுக்கிடுவது என்ன நியாயம்?

திரு. வி. பி இராசன் : இங்கே நிறையப் பேசினார்கள், மலிவு விலைமதுவைப் பற்றியும் அரிசி விலை உயர்வைப்பற்றியும் பேசி காலம் கடத்தாமல் மற்ற பிரச்சனைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரவு—செலவுத் திட்டத்தை விவசாயிகள் வரவேற்றிருக்கிறார்கள்; வியாபாரிகள் வரவேற்றிருக்கிறார்கள்; தொழிலாளர் தோழர்கள் வரவேற்றிருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஒரு அற்புதமான பட்ஜெட்டைத்தான் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு உகந்தத் திட்டத்தைத் தந்திருக் கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இது பறிக்காமல் விழுந்த பனம்பழம் என்று என்னால் சொல்லமுடியும். பனம் பழத்தின் ருசி ஏழை எளிய மக்களுக்குத்தான் தெரியும். ஒருவேளை திரு. உகம்சந்த் போன்றவர்களுக்கு அது தெரிய நியாயம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). சில கதர் ஆடை தரித்த கனதனவான்களுக்குத் தெரிய நியாயம் இல்லை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

அதே நேரத்தில் அருமைப் பெரியவர்களே, கடைக் கண் பார் வைக்கும் கணநேரப் புன்னகைக்கும் காத்துக் கிடக்கின்றவர் களுக்குக்கூட அது தெரியாது. ஏழை எளிய மக்களுக்காகவே தீட்டப்பட்ட திட்டம் இது.

13.00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய திரு. வி. பி. இராசன் அவர்களுடைய பேச்சு இந்த அளவோடு இன்று நிறுத்தப்படுகிறது. மீதியை அவர் நாளையதினம் தொடர்ந்து பேசலாம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (21-3-1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

19. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத்

துறையின் 11-7-89-ஆம் நாளிட்ட 1160 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

20. 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றங்கள் (மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத்துறையின் 1-9-89-ஆம் நாளிட்ட 1456 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

21. 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பயணப்படி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 9-8-89-ஆம் நாளிட்ட 1325 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951-ஆம்ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

22. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு — ஆயத்தீர்வைத் துறையின் 28-12-87-ஆம் நாளிட்ட 2040 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

23. 4-7-86 முதல் 17-7-86 முடியவுள்ள காலவரையில் விற்பனை செய்யப்பட்ட துருப்பிடிக்காத இரும்புப் பொருட்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வரியினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1-8-89-ஆம் நாளிட்ட 591 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

24. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான அறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS